# கொடபொல பிரதேச சபை

# மாத்தறை மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 26 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 31 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கொடபொல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசுப் பாய்ச்சல் கூற்றும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தென் மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தினால் அமர்வுப் படி மீளளிப்புச் செய்யும் போது பிரதேச சபை மந்திரிமாருக்கு கடன் அடிப்படையில் வழங்கியிருந்த மோட்டார் சைக்கிள்களின் தவணைப் பணம் என ரூபா 517,950 தொகையொன்று அறவிடப்பட்டிருந்ததுடன் அத் தொகையினை வருமான உதவியின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான 05 சனசமூக நிலையங்களின் பெறுமதியினை கணித்துக் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) சபையின் நீர் செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்திருந்த ரூபா 61,475 இற்கான நீர் உபகரணங்கள் மூலதன செலவுகள் என கணக்கீடு செய்யப்படாமல் மீண்டுவரும் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது சபையின் 02 நூலகங்களுக்காக கொள்வனவு செய்திருந்த மற்றும் நன்கொடையாக கிடைத்திருந்த புத்தகங்களின் பெறுமதி ரூபா 323,669 தொகை எனினும் ரூபா 313,389 தொகை மாத்திரம் மூலதனப்படுத்தியிருந்தமையினால் ரூபா 10,280 இற்கான தொகையினால் சொத்துக்கள் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) நூலகப் புத்தகங்கள் கொள்வனவின் போது பெற்றிருந்த கழிவுத் தொகை ரூபா 55,727 தொகை மூலதன செலவுத் தலைப்பிற்கு வரவு வைத்து வருமானத் தலைப்பு

ஒன்றிற்கு செலவு வைக்கப்பட்டிருக்காத போதிலும் நூலகப் புத்தகக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) வீதி விளக்குகள் பராமரிப்பு தொடர்பாக சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 202,059 தொகை கடன்பட்டோர்கள் என கணக்கீடு செய்திருக்கவில்லை.

(எ) காணிகள் மற்றும் கட்டிடங்களின் கீழ் மூலதனப்படுத்தப்பட வேண்டிய ரூபா 222,350 இற்கான செலவுகள் தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் மூலதனப்படுத்தியிருந்ததுடன் அகற்றப்பட்ட கதவுகளின் பெறுமதியை புத்தகங்களில் இருந்து அகற்றியிருக்கவில்லை.

1.3.2 தொங்கல் கணக்குகள்

----------------------------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ள ரூபா 1,460,873 இற்கான தொங்கல் கணக்கின் வரவு மீதி தீர்க்கப்படாமல் முன்கொண்டு வரப்பட்டிருந்தது.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

----------------------------------------------------------------------------------------------

(அ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்துள்ள பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 29,959,394 ஆகும்.

(ஆ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்துள்ள செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 23,463,829 ஆகும்.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-------------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 32,925,550 பெறுமதியான காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பான கணிப்பீட்டு சபை அறிக்கைகள் ரூபா 211,819 பெறுமதியான நிலையான வைப்புக்கள் தொடர்பான வைப்புச் சான்றிதழ்கள் மற்றும் வைப்புப் பதிவேடுகள் போலவே ரூபா 346,834 பெறுமதியுடைய பெறுமதி கூட்டிய வரி தொடர்பாக வரிகள் பதிவேடு மற்றும் ரூபா 93,060 இற்கான வாடகை கட்டுப்பாட்டுக்கான பட்டோலையும் கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை.

1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

----------------------------------------------------------------------------------------------------

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| | (ii) விதி 193 | பாதீட்டு மற்றும் குறை நிரப்பு அங்கீகரித்த செலவுகளுடன் செலவு விடயங்களின் உள்ளவாறான செலவுகளை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைகளுக்கான காரணங்களை காட்டும் கூற்றொன்று சமர்ப்பித்திருக்கவில்லை. |
| | (ii) விதி 218 | சபையினால் பயன்படுத்தப்படும் மற்றும் வதிவதற்கு எடுக்கப்படும் அனைத்துக் காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொரு வருடத்திற்கு ஒரு முறையேனும் பரிசோதனை மேற்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) | 2002 நவம்பர் 28 திகதி இலக்கம் ஐஏஐ/2002/02 கொண்ட திறைசேரி சுற்று நிருபம் | கணனி துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,439,133 தொகையாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,596,838 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

தலைவரினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பிட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயங்கள் | மதிப்பீட்டு | உள்ளவாறான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீதவரி | 1,063 | 1,310 | 264 |
| வாடகை | 6,797 | 5,593 | 1,539 |
| ஏனைய வருமானங்கள் | 10,701 | 10,630 | - |

2.2.2 வீத வரி

----------------

2014 ஆண்டிற்காக வீத வரி பில்போடப்பட்டவை ரூபா 1,063,000 தொகையாக காணப்பட்டதுடன் அத் தொகையில் ஆண்டின் போது பெறுவனவுகள் ரூபா 1,310,124 ஆகும். 2014 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை வீத வரி மீதி ரூபா 264,234 ஆக காணப்பட்டதுடன் அறவிடப்பட்டுள்ள தொகை ரூபா 72,004 ஆகும். அதன் பிரகாரம் நிலுவைத் தொகையில் அறவீடுகளின் முன்னேற்றம் நூற்றிற்கு 27 ஆகும்.

2.2.3 வாடகை

---------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை வாடகை பெறுமதி ரூபா 1,477,723 ஆக காணப்பட்டதுடன் அந்த நிலுவையில் 2014 ஆண்டின் போது ரூபா 132,832 தொகை ஒன்று அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிலுவைத் தொகையில் அறவீடுகளின் சதவீதம் நூற்றிற்கு 09 ஆகும்.

2.2.4 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-----------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த ரூபா 6,939,223 இற்கான நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் பற்றிய விபரம் கீழே தரப்பட்டிருந்தது.

| | ரூபா. |
|---|---|
| நீதி மன்றத் தண்டப் பணம் | 760,589 |
| முத்திரைக் கட்டணம் | 6,178,634 |

2.2.5 நீர்க் கட்டணம்

-----------------------

பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் செயற்படுத்தப்பட்ட நீர் செயற்திட்டத்தின் மூலம் நீர் வசதிகள் வழங்கப்பட்ட 1089 நீர் நுகர்வோர்களினால் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 625,307 தொகை ஒன்றும், 2014 ஆண்டின் போது நீர் வழங்களை துண்டித்திருந்த நீர் நுகர்வோர்களிடமிருந்து ரூபா 161,662 தொகையொன்று அறவிடப்பட வேண்டி காணப்பட்டது. அத் தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.6 களியாட்ட வரி

-----------------------

தெனியாய துஸித சினிமா படமாளிகையில் இருந்து 1995 மே மாதம் முதல் 2005 ஜூலை மாதம் வரையான 10 வருட காலப் பகுதியில் சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 419,132 இற்கான களியாட்ட வரியினை அறவீடு செய்வதற்காக வழக்கு தாக்கல் செய்திருந்த போதிலும் சபையின் பிரதிநிதிகள் வழக்கு தவணைகளில் நீதி மன்றிற்கு செல்லாமையால் இந்த வழக்கு நீதி மன்றினால் தள்ளுபடி செய்யப்பட்டிருந்ததுடன் நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு முடியாதுள்ளது.

3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

------------------------------------------------------

3.1.1 வீதி விளக்குகள் பராமரிப்பு உதவி மீளளிப்புச் செய்தல்

----------------------------------------------------------------------------------------------

பிரதேச சபை வீதி விளக்கு பராமரிப்புக்காக 2009 முதல் 2014 ஆண்டு வரை காலப் பகுதிக்காக ரூபா 202,059 தொகை ஒன்று இலங்கை மின்சார சபையில் இருந்து மீளளிப்பு செய்திருக்கவில்லை.

இது தொடர்பாக 2010 ஆகஸ்ட் 17 ஆம் திகதிய இலக்கம் பீஈ/01/01 மற்றும் 2010/17 கொண்ட மின்சக்தி மற்றும் வலு சக்தி அமைச்சு செயலாரின் சுற்று நிருபத்தின் பந்தி 1.2 தொடர்பாக சபை கவனம் செலுத்திருக்கவில்லை.

3.1.2 மனித வள முகாமைத்துவம்

-----------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் ஆளணிக் கோப்பு பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| பதவியணி வகை | அங்கீகரிக் கப்பட்ட | உள்ளவாறான | வெற்றிடம் | மிகை |
|---|---|---|---|---|
| நிறைவேற்று | 01 | 01 | - | - |
| மூன்றாம் தரம் | 01 | 02 | - | 01 |
| இரண்டாம் தரம் | 19 | 15 | 04 | - |
| ஆரம்ப தரம் | 41 | 51 | - | 10 |
| ஏனைய(அமைய, தற்காலிக, ஒப்பந்த) | - | 15 | - | 15 |
| | 62 | 84 | 04 | 26 |

(i) மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி ஆணையாளரிடம் பதவியணிச் சம்பளம் மற்றும் மந்திரிமார் படி என ரூபா 16,086,730 தொகையொன்று மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. அத்துடன் ஆண்டிற்கான செலவுகள் ரூபா 18,276,739 ஆக காணப்பட்டிருந்தமையால் சபை நிதியத்திற்கு ரூபா 2,190,009 மேலதிக செலவு பொறுப்பொன்று ஏற்பட்டிருந்தது.

(ii) திறைசேரி செயலாளரின் 2002 ஜனவரி 03 திகதிய இலக்கம் 17 கொண்ட முகாமைத்துவச் சேவை சுற்று நிருபத்தின் பிரகாரம் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அமைய/ பிரதியீட்டு, ஒப்பந்த அல்லது வேறு ஏதேனும் அடிப்படையில் ஊழியர்கள் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளல் இடைநிறுத்தப்பட்டிருந்த போதிலும் அச் சுற்று நிருப அறிவுரைகளை மீறி 15 அமைய மற்றும் பிரதியீட்டு ஊழியர்கள் சேர்க்கப்பட்டு ரூபா 1,426,702 தொகையொன்று சபை நிதியத்தில் இருந்து சம்பளமாக செலுத்தப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

---

4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

---

சபை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமைத்திருக்கவில்லை.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

மீளாய்வாண்டிற்கான சமர்ப்பித்திருந்த பாதீட்டின் பிரகாரம் காணப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவு ஆண்டிற்கான உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் ஒப்பீடு செய்யும் போது போதியளவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் சபையின் பாதீடு நிதிக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) வருமான நிருவாகம்

(ஊ) களஞ்சிய கட்டுப்பாடு

(எ) மனித வள முகாமைத்துவம்